IJCRT.ORG ISSN : 2320-2882

INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS (IJCRT)

An International Open Access, Peer-reviewed, Refereed Journal

# அரிய ஆவணம் கண்டுபிடிப்பு: பாரதியாரின் நாட்டுப்பாட்டு முதல் பதிப்பு

**Rare document discovered: First edition of Bharathiyar's Nattupattu**

முனைவர் ஆ. மணி, துணைப்பேராசிரியர் - தமிழ், பாரதிதாசன் அரசினர் மகளிர் கல்லூரி, புதுச்சேரி - 605 003,: https://orcid.org/0009-0000-9256-6420

**ஆய்வுச் சுருக்கம்**

மகாகவி பாரதியார் எழுதிய நாட்டுப்பாட்டு என்னும் பெயரிய நூலொன்றை 1917இல் பரலி சு. நெல்லையப்பர் முதன்முறையாகப் பதிப்பித்து வெளியிட்டார். இதனைத் தற்கால ஆய்வாளர்கள் செய்தியளவில் அறிந்துள்ளனரே தவிர, அப்பதிப்பைக் கண்ணால் கண்டவர்கள் யாருமில்லை. இதுகாறும் எவருடைய பார்வைக்கும் கிட்டாத நாட்டுப்பாட்டு நூலின் முதல் பதிப்பு (1917) தற்போது கிடைத்துள்ளது. கிடைத்தற்கு அரிதாக இருந்த அப்பதிப்பினை அறிமுகம் செய்வது இக்கட்டுரையாகும். இம்முயற்சிக்கு நாட்டுப்பாட்டு முதல் பதிப்பு (1917) முதன்மைத் தரவாகும்.

**Synopsis**

A book titled Naduppattu, written by Mahakavi Bharathiyar, was first published by Parali S. Nellaiappar in 1917. Although contemporary researchers are aware of this, no one has seen the publication till the date. The first edition (1917) of the book Naduppattu, which has not been seen by anyone until now, has now been made available. This article is described to that edition, which was rare to find. The first edition of Naduppattu (1917) is the primary data for this paper.

**குறிச்சொற்கள்**

மகாகவி பாரதியார், சி. சுப்பிரமணிய பாரதி, பாரதி, பரலி சு. நெல்லையப்பர், நெல்லையப்பர், நாட்டுப்பாட்டு, முதல் பதிப்பு, 1917.

## உரைக்களம்

மகாகவி பாரதியாரின் நூலாகிய நாட்டுப்பாட்டு முதன்முறையாகப் பரலி சு. நெல்லையப்பரால் 1917இல் வெளியிடப்பட்டது. அப்பதிப்பு 1919இல் இரண்டாம் பதிப்பாக நெல்லையப்பரால் மீண்டும் பதிப்பிக்கப்பட்டது. அப்பதிப்பே, இதுகாறும் பாரதி ஆய்வாளர்களாலும், அறிஞர் பெருமக்களாலும் கண்டறியப்பட்டுப் பயன்பாட்டில் இருந்து வருகின்றது. ‘1917 ஆம் வருட முதல் பதிப்பு எவ்வளவு

முயன்று தேடியும் பார்வைக்குக் கிடைக்கவில்லை” என்ற சீனி. விசுவநாதனின் (2012: 772) கருத்து நினையத்தக்கது. இப்படிப் பலரும், பல ஆண்டுகளாகத் தேடியும் கிடைக்காத அரிய அப்பதிப்பு (1917 பதிப்பு) தற்போது கிடைத்துள்ளது. கிடைத்தற்கரிய ஆவணமாகிய நாட்டுப்பாட்டு நூலின் முதல் பதிப்பினை ஆய்வுலகிற்கு முதன்முறையாக அறிமுகம் செய்யும் வாய்ப்பினைப் பெற்றமைக்கு மகிழ்கின்றேன். இது நிற்க. இனி, நாட்டுப்பாட்டு நூல் குறித்த அறிஞர் பெருமக்களின் கருத்துக்களைக் காணலாம்.

**நாட்டுப்பாட்டு - அறிஞர் கருத்துக்கள்**

நாட்டுப்பாட்டு நூல் முதன்முதலாக வெளியான ஆண்டு குறித்தும், பதிப்பின் பெயர் குறித்தும் அறிஞர்களிடையே கருத்து வேறுபாடுகள் காணப்படுகின்றன. நாட்டுப்பாட்டு 1917இலில் வெளியானது என்றும், 1918இல் வெளியானது என்றும் கூறுவர். 1917 / 1918 இல் நாட்டுப்பாட்டுப் பதிப்பு வெளியானது என்ற கருத்து அறிஞர்களால் கூறப்பட்டிருப்பினும், அப்பதிப்பு வெளியான நாள், மாதம் முதலியன அறிஞர்களால் கூறப்படவில்லை என்பதைக் காணமுடிகின்றது. 1918 இல் பாரதியார் இந்திய எல்லைக்குள் திரும்பும் எண்ணத்துடன் இருந்தார். அந்த ஆண்டு நவம்பரில் கடலூரில் பாரதியார் கைது செய்யப்பட்டது நாம் அனைவரும் அறிந்த ஒன்று. எனவே, அந்த ஆண்டில் நாட்டுப்பாட்டுப் பதிப்பு வெளிவந்திருக்க வாய்ப்பில்லை என்றே சொல்லலாம். எனவே, 1918க்கு முன்னர்த்தான் நாட்டுப்பாட்டு முதல் பதிப்பாக வெளிவந்திருக்க வேண்டும் எனலாம். இதற்கான காரணங்களை நோக்குவோம்.

**பாரதி எழுதிய கடிதம்**

பாரதி, 19 ஜுலை 1915 அன்று புதுச்சேரியிலிருந்து பரலி சு. நெல்லையப்பருக்கு மிக நீண்ட கடிதம் (ஏறத்தாழ 4 பக்கம்) ஒன்றை எழுதுகின்றார். அந்தக் கடிதத்தின் இறுதிப்பகுதியில், “உனது கடிதம் கிடைத்தது. குழந்தைக்கு உடம்பு செம்மையில்லாமல் இருந்தபடியால் உடனே ஜவாப் எழுத முடியவில்லை. குழந்தை புதிய உயிர் கொண்டது. இன்று உன் விலாசத்துக்கு நாட்டுபாட்டுக்கள் அனுப்புகிறேன். அவற்றைப் பகுதி பகுதியாக உனது பத்திரிக்கையிலும் ஞானபானுவிலும் ப்ரசுரம் செய்வித்திடுக. புதுமைப்பெண் என்றொரு பாட்டு அனுப்புகிறேன். அதைத் தவறாமல் உடனே அச்சிட்டு அதன் கருத்தை விளக்கி எழுதுக. எங்கேனும் எப்படியேனும் பணம் கண்டுபிடித்து ஒரு நண்பன் பெயரால் நமக்கனுப்புக.
தம்பி – உனக்கேனடா இது கடமையென்று தோன்றவில்லை? நீ வாழ்க.

உனதன்புள்ள
பாரதி”

என வரும் பகுதி அறியத்தக்கது. இதன் மூலம், 1915 ஜூலையிலேயே நாட்டுப்பாட்டு நூலின் பாடல்கள் பரலி நெல்லையப்பருக்குப் பாரதியால் அனுப்பட்டுள்ள உண்மை புலனாகின்றது. நாட்டுப்பாட்டுக்களை இதழ்களில் வெளியிடுமாறு பாரதி வேண்டுகோள் வைத்திருந்தாலும், நூலாக அச்சிடுவதும் அவருக்கு ஏற்புடையதுதான் எனக் கொள்வதில் தவறில்லை. எனவே, நாட்டுப்பாட்டு என்ற பெயரும் பாடல்களும் பாரதியால் நெல்லையப்பருக்கு 1915இலேயே அனுப்பப்பட்டுள்ளன என்பதை நினைவில் கொள்வது நல்லது. பாரதியின் கருத்துப்படிச் சில பாடல்கள் இதழ்களில் நெல்லையப்பரால் வெளியிடப்பட்டன என்பது காலம் காட்டும் உண்மையாகும். எனில், நாட்டுப்பாட்டு முதல் பதிப்பாக வெளிவந்தது எப்போது? என்பதைக் காண்போம்.

பாரதியின் மற்றொரு கடிதம்

கடலூர்ச் சிறையில் இருந்து மீண்டு, கடையம் சென்று சேர்ந்த பாரதி, கடையம், 21 டிசம்பர் 1918 என நாளிட்ட கடிதத்தில் நாட்டுப்பாட்டு முன்னைப் பதிப்பின் பிரதிகள் இருந்தால் அனுப்ப வேண்டுமென்று நெல்லையப்பருக்குக் கடிதம் எழுதியுள்ளார். கடிதம் வருமாறு: "ஸ்ரீமான் நெல்லையப்ப பிள்ளைக்கு நமஸ்காரம்.

நான் ஸௌக்கியமாகக் கடையத்துக்கு வந்து சேர்ந்தேன். இவ்வூருக்கு நான் வந்த மறுநாள் பாப்பா பாட்டு, முரசு, நாட்டுப் பாட்டு, கண்ணன் இவை வேண்டுமென்று பலரிடமிருந்து கடிதங்கள் கிடைத்தன.
என் வசம் மேற்படி புஸ்தகங்கள் இல்லை. உன்னிடம் மேற்படி புஸ்தகங்களிருந்தால் அனுப்பக்கூடிய தொகை முழுதும் அனுப்பும்படி ப்ரார்த்திக்கிறேன்.
.. .. ..

பாப்பா பாட்டு முதலியன உன்னிடம் இல்லாவிட்டால் உடனே அவற்றை மீண்டும் ப்ரசுரம் செய்தல் மிகவும் அவஸரம்.
இவை முதலிய எல்லா விஷயங்களைப் பற்றி உன்னிடம் நேரே பேச விரும்புகிறேன். இதன் பொருட்டாக இக்கடிதம் கண்டவுடன் இங்கு நீ நேரே புறப்பட்டு வந்துசேரும்படி வேண்டுகிறேன். ஸ்ரீமான் குவளை க்ருஷ்ணையங்கார் முதலிய நம்முடைய நண்பர்களுக்கு என் நமஸ்காரத்தைத் தெரிவிக்கும்படி ப்ரார்த்திக்கிறேன். இன்னும் ப்ரசுரம் செய்ய வேண்டிய நூல்கள் என்னிடம் பல இருக்கின்றன. நான் இப்போது பிரிடிஷ் இந்தியாவுக்கு வந்துவிட்டபடியால் நமது ப்ரசுரங்களுக்குப் பணம் கொடுக்கக் கூடிய நண்பர்களும் பலர் இருக்கிறார்கள். உன்னை ஸஹாய புருஷனாகக் கொண்டால் ப்ரசுர கார்யம் தீவிரமாகவும் செம்மையாகவும் நடைபெறுமென்று தோன்றுகிறது.
எதற்கும், நீ உடனே புறப்பட்டு இங்கு வந்துசேரும்படி ப்ரார்த்திக்கிறேன்.

உனக்கு மஹாசக்தி அமரத் தன்மை தருக.

உனதன்புள்ள,
சி. சுப்பிரமணிய பாரதி".

இக்கடிதத்தில், முன்னைய பதிப்பின் பிரதிகள் கேட்டு எழுதுவதால், அப்பதிப்பு 1918க்கு முன்னரே வந்திருக்க வேண்டும் என்பது தெளிவு. மேலும், 'உன்னை ஸ்காய புருஷனாகக் கொண்டால், ப்ரசூர காரியம் செம்மையாக நடைபெறும்' எனப் பாரதி கூறியதுபோலவே, நெல்லையப்பர் பாரதி வாழ்ந்த காலத்திலேயே நாட்டுப்பாட்டை மூன்று முறை பதிப்பித்திருக்கிறார் என்பது குறிக்கத்தக்கது. பாரதியின் நூல்களில் அவர் வாழ்ந்த காலத்திலேயே மூன்று பதிப்புக்களைப் பெற்ற ஒரே நூல் நாட்டுப்பாட்டுத்தான் என்பது அறியத்தக்கது. நாட்டுப்பாட்டின் இரண்டாம் பதிப்பே, அறிஞர்களால் அறியப்பட்டது, பிற நாம் கண்டறிந்து உரைப்பன. மூன்று பதிப்புக்களின் ஒப்பீடு தனிக் கட்டுரையாக வரும். இனி, முதல் பதிப்பினை உறுதிப்படுத்துவோம்.

**நாட்டுப்பாட்டு - முதல் பதிப்பு**

நாட்டுப்பாட்டு நூலின் முதல் பதிப்பு 1917இல் வெளிவந்தது என அறிஞர் பலர் குறித்திருப்பினும், மாதம், நாள் முதலியன அவர்களால் குறிக்கப்படவில்லை என்பதை முன்னரே கண்டோம். இதன் மூலம், அவர்கள் யாரும் அப்பதிப்பினைக் கண்ணால் கண்டது இல்லை என்பது தெளிவாகிறது. இதுகாறும் யாருக்கும் கிட்டாத அப்பதிப்பினைக் காண்போம்.

பிங்கள ஆண்டு புரட்டாசி 1 என முகவுரையில் நாள் குறிக்கப்பட்ட நாட்டுப்பாட்டு நூலின் பதிப்பு ஒன்று கிடைத்துள்ளது. பிங்கள ஆண்டுக்குச் சரியான ஆங்கில

ஆண்டு 1917 - 1918 ஆகும். பிங்கள ஆண்டுப் புரட்டாசி 1 என்பது 1917ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 16 ஆம் தேதி ஆகும். நாட்டுப்பாட்டு நூலினைப் பதிப்பித்த பரலி சு. நெல்லையப்பர், அப்போது சென்னை, சிந்தாத்திரிப்பேட்டை முகவரியில் இருந்தார் என்பதை அப்பதிப்பின் முகவுரை நமக்கு உணர்த்துகின்றது. முகவுரை வருமாறு:

“முகவுரை

இந்த நூலுக்கு ஒரு பெரிய முகவுரை எழுத வேண்டியது அவசிய மில்லை.

இதன் ஆசிரியர் தெய்வம் கண்ட கவி. இவரைப் பற்றி எழுத வேண்டுமானால் இது போன்று பல புஸ்தகங்கள் வேண்டும். இதில் உள்ள பாடல்களில் சில முன் வெளியானவை.

இந்த நூலில் உள்ள பாடல்களைத் தமிழர் ஒவ்வொருவரும் படித்து மகிழ வேண்டு மென்பது எனது விருப்பம்.

எனது தாய்த் திருநாட்டைப் புகழும் இத்தகைய பாடல்களை பாடி மகிழுமாறு யான் இந்த நாட்டிலே கோடிக் கோடி பிறப்பு பிறக்க வேண்டும் என்று விரும்புகிறேன். அண்ட சராசரங்கள் அனைத்தையும் ஆக்கியும் காத்தும் மாய்த்தும் வரும் பரம்பொருளில் பெரும் புகழை ஒருவன் எவ்வளவு காலந் தான் புகழ்ந்து போற்றினும், ஆவல் தீருமோ?. அதுபோல இந்த தெய்வீகத் திருநாட்டின் பெருமைகளை ஒருவன் எவ்வளவு காலம் தான் புகழ்ந்து பாடினும் ஆவல் தீராது.

எந்தாய் வாழ்க! வந்தே மாதரம்!

சிந்தாதிரிப்பேட்டை, சென்னை: நெல்லையப்பன்

பிங்கள, புரட்டாசி, க”.

சுதேச கீதங்கள் எனப் பெயரிட்டால், அரசு எதிர்க்கும் என்பதால் பரலி சு. நெல்லையப்பரே நாட்டுப்பாட்டு எனப் பெயரிட்டு வெளியிட்டார் என்றும் கூறுவாருண்டு. பாரதியே “நாட்டுப்பாட்டுக்கள்” எனக் குறித்துள்ளமையால், அது பிறர் வைத்த பெயர் என்பது பொருந்தாது. சீனி. விசுவநாதனும் முன்னரே இவ்வுண்மையைக் குறித்துள்ளார். இனி, நாட்டுப்பாட்டு முதல் பதிப்பில் இடம்பெற்றுள்ள பாடல்களின் விவரம் வருமாறு:

| வ.எண் | நாட்டுப்பாட்டு முதல் பதிப்பு (1917) | | |
|---|---|---|---|
| | பாடல் தலைப்பு | பாட்டுத் தொடக்கம் | கண்ணி / பாடல் பகுதிகளின் எண்ணிக்கை |
| 1. | வந்தே மாதரம் | வந்தே மாதர மென்போம் | பல்லவி 1, சரணம் 3 |
| 2. | நாட்டுப்பாட்டு - செந்தமிழ் நாடு | செந்தமிழ் நாடென்னு | 10 |
| 3. | பாரத தேசம் | பாரத தேசமென்று | 13 |
| 4. | நாட்டு வணக்கம் - சுதேச வந்தனம் | எந்தையும் தாயு | 3 |
| 5. | எங்கள் நாடு | மன்னு மிமய மலை | 3 |
| 6. | ஜாதிய கீதம் 1 | ஸூஜலாம் ஸூபலம் | 5 |
| 7. | ஜாதிய கீதம் 2 | இனிய நீர்ப்பெருக்கினை | 7 |
| 8. | ஜாதிய கீதம் 3 | நளிர்மணி நீரும் | 6 |

பாரதியைப் போற்றிய வள்ளல் கானாடு காத்தான் வை. சு. சண்முகம் செட்டியாரால் பலருக்கும் இலவசமாக வழங்கப்பட்ட நாட்டுப்பாட்டின் முதல் பதிப்பு மேற்கண்ட எட்டுப் பாடல்களே கொண்டது. இதற்கு மாறாகச் சீனி. விசுவநாதன் (2012: 772) 1. செந்தமிழ் நாடு (செந்தமிழ் நாடென்னும்), பாரத தேசம் (பாரத தேசமென்று), 3. தமிழ் (யாமறிந்த மொழிகளிலே), 4. தமிழ்த்தாய் (ஆதிசிவன் பெற்று விட்டான்) ஆகிய நான்கு பாடல்கள் தாம் நாட்டுப்பாட்டின் இரண்டாம் பதிப்பில் (1919) புதியனவாகச் சேர்க்கப் பெற்றன என்கின்றார். ஆனால், முதல் இரு பாடல்களும் முதல் பதிப்பிலேயே இடம்பெற்றவை என்பதை மேற்பட்டியல் விளக்கக் காணலாம். பின்னைய இரு பாடல்களே 1919ஆம் ஆண்டுப் பதிப்பில் புதிதாகச் சேர்க்கப்பெற்றவை எனலாம். மேலும் பின்னைய பல பாடல்கள் முதல் பதிப்பில் இல்லாமல், இரண்டாம் பதிப்பில் சேர்க்கப்பெற்றவை. எனவே, பாரதி படைப்புக்களின் காலவரிசையை மாற்றியமைக்க வேண்டிய தேவையுள்ளது என்பது அறியத்தக்கது.

**முடிப்புரை**

பாரதியின் நாட்டுப்பாட்டு நூலின் முதல் பதிப்பு 1917 செப்டம்பர் 15 (பிங்கள புரட்டாசி க) என நாள் குறிக்கப்பட்டு வெளிவந்த பதிப்பாகும். எட்டுப் பாடல்களே கொண்ட நூலாகிய அப்பதிப்பு ஏறத்தாழ 22 பக்கங்களைக் கொண்டது (அட்டைப்படம் உட்பட). “பூலோகத்தில் தர்ம ஸ்தாபனம் செய்வதற்காகச் சகல மதங்களுக்கும் பொதுவான கடவுள் அவதாரமாய் விரைவில் வருகின்றார்” என்ற ஒரு பக்கக் குறிப்பு நெல்லையப்பரால் அப்பதிப்பில் தரப்பட்டுள்ளது. 1915இல் நெல்லையப்பருக்கு அனுப்பப்பட்டு, 1917 செப்டம்பரில் பாரதியின் நாட்டுப்பாட்டு நூல் முதல் பதிப்பாகச் சென்னை, இந்தியா அச்சுக்கூடத்தில் பரலி சு.

நெல்லையப்பரால் பதிப்பிக்கப்பட்டு வெளிவந்துள்ளது. எவருக்கும் கிடைக்காது, இப்போது கிடைத்துள்ள இந்த அரிய பதிப்பு, பாரதி படைப்புக்களின் காலவரிசையை மாற்றுவது காலத்தின் தேவை என்பதையும் உணர்த்துகின்றது. இக்கருத்துக்கள், இக்கட்டுரையாளரால் முதன்முறையாகத் தமிழ் ஆய்வுலகிற்கு உரைக்கப்படுகின்றன என்பது நினையத்தக்கது.

**துணை நூல்கள்**


நெல்லையப்பன். பரலி. சு. (பதி.ஆ.). 16.08.1917 (முதல் பதிப்பு - பிங்கள, புரட்டாசி க). நாட்டுப்பாட்டு. சென்னை: இந்தியா அச்சுக்கூடம்.

நெல்லையப்பன். பரலி. சு. (பதி.ஆ.). 1919 ஜூன் - ஜூலை (இரண்டாம் பதிப்பு - சித்தார்த்தி, ஆனி). நாட்டுப்பாட்டு. சென்னை: இந்தியா அச்சுக்கூடம்.

விசுவநாதன். சீனி. (பதி.ஆ.). 11.09.2009 (முதல் பதிப்பு). கால வரிசைப்படுத்தப்பட்ட பாரதி படைப்புகள் (பத்தாம் தொகுதி). சென்னை: சீனி. விசுவநாதன்.

விசுவநாதன். சீனி. (பதி.ஆ.). 13.04.2012 (முதல் பதிப்பு). காலவரிசையில் பாரதி பாடல்கள். சென்னை: சீனி. விசுவநாதன்.

https://www.bharathiyar.info/kadithangal/nellayappar_kadayam.htm